**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : DVC 4/2025.**

**Prosecution witness : ம.சா.1.** **Date : 15.07.2025.**

| | |
|---|---|
| **Name : நித்யா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) திருமணம் முடிந்து எதிர்மனுதாரருடன் நான் எத்தனை முறை எங்கெங்கு வெளியே சென்றேன் என்றால் எங்கள் வீட்டிற்கு ஒரு நான்கு முறை சென்றேன். மாதேஷ்வரன் மலைக்கு ஒரு முறை சென்றோம். என் கணவரின் அக்கா வீட்டிற்கு ஒரு முறை சென்றோம். ஏற்காடு ஒரு முறை சென்றோம். என் கணவரின் உறவினர் வீட்டிற்கு அழைத்து சென்றார்.

2) என் கணவரின் அக்கா எங்கு குடியுள்ளார் என்றால் என் கணவரின் வீட்டில் தான் உள்ளார். மணிமேகலை என்ற மற்றொரு அக்கா இளம்பிள்ளையில் குடியிருந்து வருகிறார். நான் 1ம் எதிர்மனுதாரர் மீது சேலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3) நான் சொல்வது தவறு என்றும் நீதிமன்றத்தில் என் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் என்ன சொல்லி கொடுத்தேனா அல்லது எனது பொருட்களை மட்டும் 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வாங்கிக் கொடுக்க சொல்லி புகார் அளித்தேனா என்றால் நீதிமன்றத்தில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளையும் சொல்லி தான் புகார் அளித்தேன். நான் சொல்வது தவறு என்றும் பொருட்களை வாங்கி தரசொல்லி தான் புகார்

அளித்ததால் நீதிமன்றத்தில் அதை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) 1ம் எதிர்மனுதாரர் இரவு முழுவதும் போனில் பேசுவது, சேட் செய்வது குறித்து என் தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தான் இரவு முழுவதும் யாருடனோ பேசினேன் என்றும் அதை அவர் கேட்டதற்கு 1ம் எதிர்மனுதாரரை ரூமிலிருந்து வெளியே செல்லுமாறு அவரை தரைக்குறைவாக பேசினேன் என்றால் சரியல்ல.

5) திருமணம் ஆனதிலிருந்து என் கணவர் என்னுடன் சந்தோஷமாக இல்லை என்றும் அவர் சந்தோஷமாக இருக்க வரும் போதெல்லாம் அவரை பிடிக்கவில்லை ரூமை விட்டு வெளியே செல்லுமாறு சொன்னேன் என்றால் சரயில்ல. அவர் என்னுடன் சேர்ந்து வாழ பலமுறை முயற்சி செய்தார் என்றும் நான் தான் அவருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாமல் அவர் கட்டிய தாலியை கழட்டி வீசிட்டு என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

6) திருமணம் முடிந்து தனிக்குடித்தனம் இருந்தோமா என்றால் கூட்டுக் குடும்பமாக இருந்தோம். 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது தாய், தகப்பனார், அவரது அக்கா திவ்யா ஆகியோருடன் இருந்தோம். 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் அடிமையாக நடத்தியதாக சொல்லியுள்ள நிலையில் என்ன வகையான அடிமைத்தனம் படுத்தினார்கள் என்றால் வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் வாங்கினார்கள். என்னை வேலைக்கு செல்ல சொல்லி டார்ச்சர் செய்தார்கள்.

7) நான் சொல்வது தவறு என்றும் வீட்டில் உள்ள வேலைகள் அனைத்தையும் என் மாமியார் செய்து விடுவார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக 2 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கொடுமைபடுத்தியதாக தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எத்தனை மணிக்கு அலுவலகத்திற்கு சென்று எத்தனை மணிக்கு வீடு திரும்புவார் என்றால் காலை 08.45 மணிக்கு சென்று இரவு 08.00 மணி முதல் 10.00 மணிக்குள் வருவார்.

8)எதிர்மனுதாரர்கள் என்னை அடித்து, உதைத்து கொடுமைப்படுத்திய விவரத்தை காவல் நிலையம் மற்றும் உறவினர்களிடம் சொல்லியுள்ளேனா என்றால் நான் காவல் நிலையம் சென்று சொன்னேன். வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்திய விவரத்தை காவல் நிலையத்தில் புகார் அளித்த போது குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். திருமணம் ஆகி எத்தனை நாட்களுக்கு பிறகு புகார் அளித்தேன் என்றால் 7 மாதம் கழித்து புகார் கொடுத்தேன்.

9) உண்மையாக வரதட்சனை கொடுமை சம்மந்தமாக 7 மாதத்தில் கொடுத்திருந்தால் காவல் துறை நிச்சயம் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும் அவ்வாறு நான் புகார் கொடுக்காததால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தான் முதன் முதலில் இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் ஆமாம். சமூக நல பாதுகாப்பு அலுவலரை நாடினேனா என்றால் இல்லை.

10) சமூக நல பாதுகாப்பு அலுவலரை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றும் அவரிடம் புகார் அளித்திருந்தால் நான் சொல்லியுள்ள சங்கதி தவறு என்று அறிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்பதால் சமூக நல பாதுகாப்பு அலுவலரை நான் அணுகவில்லை என்றால் சரியல்ல.

11) நான் என்னுடைய புகாரில் சொல்லியுள்ளவாறு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் என்னை எந்த விதத்திலும் கொடுமை செய்யவில்லை என்றும் குடும்ப வன்முறையும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும் என் கணவருக்கும் அத்தியாவசிய தேவைகளை செய்து கொள்ளுமாறு என் மாமனார், மாமியார் சொன்னதால் அவர்கள் மீதும் நான் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதை தவிர எந்த பரிகாரமும் கேட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமாய் எதிர்மனுதாரர் கேட்டுக் கொள்கிறார் என்றால் சரயில்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.